# பத்தாம் வகுப்பு * தமிழ் * விரிவானம் * இயல் 2

# புயலிலே ஒரு தோணி

## முன்னுரை

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

இயற்கையின் அசைவு சீற்றமாய் ஊழித்தாண்டவமாய் மாறுகையில் எதிர் நிற்க இயலாமல் தோற்றுத்தான் போகிறோம். புலம்பெயர்ந்த தமிழரான ப.சிங்காரம் இந்தோனேசியாவில் குடியேறியவர். உயிரை உறையவைக்கும் புயலின் தாண்டவத்தை கடற் கூத்து என விவரிக்கிறார்.

## புயலின் சீற்றம்

எண்ணெய் பூசிய இருட்டு. இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள். கப்பித்தானுடன் மாலுமிகளின் பரபரப்புப் பேச்சு. தொங்கானின் உலுக்கல். கடல் மழை உப்பருவியாய் உள்ளிறங்கியது. கடல் வெறிக் கூத்தாட்டத்தால் தொங்கான் மூழ்கி, தாவி நீந்துகிறது. மூடைகள், சிப்பங்கள் கடலில் விழுந்து நீந்துகின்றன.

## அலை ஓய்ந்தது

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

அனைத்தையும் பார்த்தபடி பாண்டியன் பயந்து கிடக்கிறான். சூரிய வெளிச்சம் தெரிகிறது. பாய்மரம் ஒடிந்து கிடக்கிறது. நேரம் அறிய முடியாமல் கடிகாரம் நின்று போய்விட்டது. தொங்கான், தூக்கி எறியப்பட்ட பெட்டிகளுக்கும் புகையிலைச் சிப்பங்களுக்கும் நடுவே தன் வசமின்றிச் செல்கிறது. சீனமும் மலாயும் கலந்த மொழியில் இனிமேல் பயமில்லை இரண்டு நாளில் கரையைப் பார்க்கலாம் என்கிறார் கப்பித்தான். பகல் இரவாகி உப்புக்காற்று உடலை வருடியது.

## முடிவுரை

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

கடற்கூத்துக்குப் பின் ஐந்தாம் நாள் கரை தெரிந்தது. அடுத்த நாள் முற்பகல் பினாங்கு துறைமுகத்தை அணுகினார்கள். பிலவான் முதல் சுமத்ரா வரை பயணம் இவ்வாறாகப் பயமுறுத்தியது. சிங்கம்புணரியைச் சேர்ந்த ப.சிங்காரம் அவர்களின் படைப்பு இது. நேரடி அனுபவங்களும் கற்பனையும் கலந்து கண்முன் விவரிக்கும் புதினம் இது.

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM